# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter




## குருதீபம்
## Gurutheepam

ஓகஸ்ட் - 2021 இதழ் - 28



## பீடாதிபதியின் செய்தி

குருதீபம் ஆவணி மாத இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

குருதீபம் தொடர்ச்சியாக வெளி வருவதற்காக அர்பணிப்புடன் செயற்படும் பிரதம ஆசிரியர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் உட்படஆசிரியர் குழாத்தினர் அனைவருக்கும் எனது மனப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் பல சவால்களுக்கு மத்தியில் பல விதமான தளங்களில் செயலாற்றி வருகின்றது. இச்செயற்பாடுகளுக்கு ஆசிரிய கல்வியியலா ளர்களும், மாணவ அசிரியர்களும் வழங்கி வருகின்ற ஒத்துழைப்புகளுக்கு பாராட்டுதல் களும் நன்றிகளும்.

இலங்கையின் கல்விப் புலத்திலுள்ள பல்வேறு துறை சார்ந்தவர்களும், புலம்பெயர் தேசத்து உறவுகளும் எமது செயற்பாடுகளை நேர்வகையான மனப்பாங்கு களுடன் நோக்குவதைக் காண முடிகின்றது.

அறிவாற்றல் விருத்தியில் உள்மனச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மனித மனதின் "கறுப்பு பெட்டியை" திறக்கின்றன. சிந்தனை, சொல், அறிகை மற்றும் பிரச்சினை தீர்ப்பது போன்ற செயல்முறைகள் எவ்வாறு நிகழ்கின்றன என்பதைத் தீர்மானிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வெறுமனே மற்றவர் நடந்த பாதையில் நடக்காமல், மற்றவர் கற்பனைகளை விமர்சிக்காமல் பல வகையான தேடுதல்கள் மூலம் எமது அறிவுருவாக்கத்தின் தூண்டுதல்களுக்கு பதிலளிக்கும் "திட்டமிடப்பட்ட அல்லது வழிப்படுத்தப்பட்ட செயன்முறைகள்" நேர்வகையான மாற்றங்களை ஏற்படுத்தும்.

ஆடி மாதத்தில் பல வகைச் சிந்தனைக்கான அருட்டல்கள் வலுப்பெற்றுள்ளன. சிறுவர் துஸ்பிரயோகம், கொவிட் பரவல், ஆசிரியர்களின் போராட்டம், ஆசிரிய கல்வியியலாளர்களின் போராட்டம் போன்றன பல வகையான எழுவினாக்களை ஏற்படுத்தியுள்ளன.

பொதுவாக இதன் விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டிய தருணம். குறிப்பாக மாணவ ஆசிரியர்கள் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய தேர்ச்சிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

எமது ஆசிரிய கல்வியியலாளர்களின் வழிப்படுத்தல்கள், மாணவ ஆசிரியர்களின் வெளிப்படுத்தல்கள், கல்விசாராப் பணியாளர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் எம்மை தொடர்ந்தும் வாண்மைத்துவ விருத்தியியல் புதிய விசைப்படுத்தலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன், வடக்கிற்கான இரண்டாவது பல்கலைக்கழகமாக, வவுனியா பல்கலைக்கழகம் அறிவாற்றல் செறிவாக்கலில் சரியான பங்களிப்பை வழங்கி வன்னி மக்களை வளப்படுத்த வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகின்றேன்.

பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

## வவுனியா பல்கலைக் கழகம் தோற்றம் பெற்றதைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்ளும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம்




இலங்கையின் 17வது தேசிய பல்கலைக்கழககமாகவும் வடமாகாணத்தின் இரண்டாவது பல்கலைக்கழகமாகவும் வன்னிப் பெருநிலப் பரப்பின் முதலாவது பல்கலைக் கழகமாகவும் தோற்றம் பெற்றுள்ள வவுனியா பல்கலைக் கழகம் தனது உன்னத சேவையின் மூலம் எமது மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து மங்காப் புகழுடன் விளங்க வேண்டுமென யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது.

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd August 2021

### *போசகர்*

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

### *ஆலோசகர்கள்*

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்
திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

### *பிரதம ஆசிரியர்*

திரு.ம.நிரேஸ்குமார்

### *இணை ஆசிரியர்கள்*

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

### *வெளியீடு*

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

## அறிவாகி நிஜமாகி தொடர் நிகழச்சிகள்...


### தொடர் 08 - 06.07.2021




### தொடர் 09 - 13.07.2021





## அனைத்துக் கல்லூரிகளினதும் மாணவ ஆசிரியர்கள் இடையே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் நடத்தப்படும் அளிக்கை முன்வைப்புப் போட்டிகள்




## உவப்பத் தலைகூடி தொடர் நிகழ்ச்சி

### தொடர் 06 - 08.07.2021




**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd August 2021**

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மன்றத்தினால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட முன்வைப்புப் போட்டி முதலாவது சுற்று முடிவுகள் வெளியீடு - 09.07.2021




## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் அனைத்துக் கல்லூரிகளினதும் மாணவ ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள் வெளியீடு - 10.07.2021













## இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்கள் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து முன்வைத்தல் தொடர்பான செயற்றிட்டம் ஆரம்பம்




## எமது கல்லூரியின் தற்போதைய தோற்றம்







This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd August 2021


## ஆரம்பக் கல்வி மாணவ ஆசிரியர்களின் சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 05.06.2021




இச்செய்தியானது சென்ற மாத குருதீபத்தில் இடம் பெறத் தவறியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பாடசாலை மாணவர்களுக்கான இலத்திரனியல் செயலமர்வுகளின் நிறைவு நிகழ்ச்சி - 29.07.2021




## தன்னிகரில்லா சேவையில் எமது கல்லூரியின் பணியாளர்கள்



## தேசிய விளையாட்டு தினம் - 30.07.2021










This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd August 2021

**திருமதி. செல்வமலர் சிவபாதம், உபபீடாதிபதி (தொடருறு கல்வி) அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்...**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தொடருறு கல்விக்குப் பொறுப்பான உப பீடாதிபதியாகப் பல வருடங்கள் சேவையாற்றி எதிர்வரும் ஓகஸ்ட் 12ம் திகதி மணிவிழாக் காணும் திருமதி.செல்வமலர் சிவபாதம் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் உடல் உள ஆரோக்கியத்துடன் அவர் நீண்ட காலம் சிறப்பாக வாழவும் இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

**சித்திரத்துறை விரிவுரையாளர் திரு.கயூரனுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்...**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு புதிதாக நியமனம் பெற்ற திரு.கயூரன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சித்திரைத் துறை விரிவுரையாளராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தின் சார்பில் அவரை வருக வருக என வரவேற்பதுடன் அவருக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் - 15.07.2021**

உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல்கள் zoom செயலியினூடாக நடைபெற்றன. கல்லூரியின் பீடாதிபதியின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களின் இறுதிப் பரீட்சை, மேற்பார்வைப் புள்ளிகள், நிறைவேற்றப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் மற்றும் செயல்நிலை ஆய்வு அறிக்கை கையளிப்புத் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

**இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள்**

உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை தொடர்பான அறிவித்தல்கள் வெளியாகியுள்ள நிலையில் மாணவ ஆசிரியர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களினால் கல்வி அமைச்சின் இ-தக்ஷலாவ கற்பித்தல் முறைமையினூடாகவும் zoom செயலியினூடாகவும் குழுநிலையில் நடத்தப்பட்டு வருகின்றன.

**அமரர் நன்னிததம்பி தயாசீலன் அவர்களுக்கு எமது**




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி.த.கண்ணகி அவர்களின் அன்புக் கணவர் திரு.நன்னித்தம்பி தயாசீலன் 20.07.2021 அன்று கனடாவில் இயற்கை எய்தினார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பீடாதிபதி மற்றும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம்

**அகால மரணமடைந்த சிறுமி கிருஷாலினிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தின் கண்ணீர் அஞ்சலிகள்**

கொழும்பில் வீடொன்றில் பணியாற்றி வந்த நிலையில் அகால மரணமடைந்த மலைகச் சிறுமி கிருஷாலினிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறுவர்களை வேலைக்கமர்த்தும் துர்ப்பாக்கியமான நிலைமை தடுக்கப்பட வேண்டுமெனவும், சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமெனவும், அவர்கள் கல்வி கற்பதற்கான வழி வகைகள் அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சம்மந்தப்பட்டவர்களிடம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றது.

குறிப்பு : இன்று காலை வெளியாகிய குருதீபத்தில் இச்செய்தி தவறுதலாக 'படுகொலை செய்யப்பட்ட' சிறுமி என இடம்பெற்றுள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பணியாளர்கள் அனைவருக்கும் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கப்பட்டது - 01.08.2021**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர் நலன்புரிக் கழகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இத்தடுப்பூசி வழங்கும் செயற்பாடு வைத்தியத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது.

**IMHO மற்றும் Care for Education நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மடிக்கணினிகள் மாணவ ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்காக கையளிக்கப்பட்டன...**






















**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd August 2021**